## இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் புகையிரத பாதுகாவலர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2024)

இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் புகையிரதப் பாதுகாவலர் பதவியில் உள்ள 63 வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2025.02.21 ஆம் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட 30 வயதினை விஞ்சாத இலங்கை ஆண் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பரீட்சை 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

02. விண்ணப்பம் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our services” கீழ் உள்ள “Online Applications-Recruitment Exams/E.B.Exams” ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்கள் நிகழ்நிலை முறை மூலம் (Online) மாத்திரமே முன்வைக்கப்பட முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

03. **பதவியின் கடப்பாடுகள்:**

இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் புகையிரதப் பாதுகாவலர் பதவியில் கடமைகளை மேற்கொள்ளப்படும். அனைத்து புகையிரதப் பாதுகாப்பு சட்டம், ப்ளோக் விதிகள் மற்றும் புகையிரத அறிவுறுத்தல் கோவையினை கடைப்பிடித்த வண்ணம் புகையிரதப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் புகையிரத இயக்கத்தின் போது கையளிக்கப்படுகின்ற கடமை பட்டியலுக்கமைய கடமைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

04. **சம்பள அளவுத்திட்டம் :**

(I) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைய, ரூபா 34,130.00 - 5 x 495 - 5 x 575-10 x 720 - 10 x 745 - ரூபா 54,130.00 ஆகுமென்பதோடு, ரூ. 34,130.00 எனும் ஆரம்ப சம்பள தளத்தில் வைத்துக் கொடுப்பனவு செய்யப்படும்.

(II) இதற்கு மேலதிகமாக அரசாங்க ஊழியருக்கு ஆரம்ப சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவு களுக்கான உரிமையும் உண்டு.

(III) நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட நேரும் சந்தர்ப்பத்தில் "அக்ரஹார" காப்புறுதியின் கீழ், செலவிட்ட நிதியை மீள நிரப்பிக்கொள்ள முடியும்.

(IV) சேவை தேவைப்பாட்டிற்கமைய உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக் கொள்வதற்கான உரித்துடைமையும் காணப்படுகின்றது.

05. (அ) **கல்விசார் தகைமைகள்**

(i) இணைந்த கணிதம்,பௌதீகவியல் எனும் பாடங்களுடன் பௌதீக விஞ்ஞான துறைக்குரிய 03 பாடங்களில் கபொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல்.

(ii) சிங்களம்/தமிழ்/ஆங்கிலமொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில்(06) கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியெய்திருத்தல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள்**

(I) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிநுட்ப டிப்ளோமா பாடநெறி (இயந்திரவியல் அல்லது மின்னியல்)

அல்லது

(II) தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (இயந்திரவியல் அல்லது மின்னியல்)

அல்லது

(III) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (இயந்திரவியல் அல்லது மின்னியல்)

அல்லது

(IV) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழிநுட்பவியல் டிப்ளோமா பாடநெறி (இயந்திரவியல் அல்லது மின்னியல்)

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் முதலாவது (1) பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் (இயந்திரவியல் அல்லது மின்னியல்)

(vi) தொழில் துறைக்கு ஏற்புடைய தேசிய தொழில்சார் திறமையின் (NVQ) 06 மட்டத்தில் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

(vii) உயர் கல்வி அமைச்சின் மற்றும் மேற்கூறிய தொழிநுட்ப சான்றிதழ் வழங்கப்படுகின்ற நிறுவனங்களில் வினவி கருத்துக்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழிநுட்ப தகைகைமகளுக்கு எல்லா விதத்திலும் சமமானது என மூன்றாவது மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏனைய தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(இ) **உடற்சார் தகைமைகள்**

I. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கு ஏனைய எல்லா வகையிலும் உடற்சார் தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

II. பதவியில் கடமை புரிவதற்கு தேவையான உடற்சார் தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.
III. உயரம் குறைந்த பட்சம் 05 அடி 04 அங்குலம் இருக்க வேண்டும் என்பதோடு வெளிசுவாசத்தின் போது மார்பு 32 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
IV. 66' 6 /,6/ கண் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

(ஈ) **வேறு தகைமைகள்** :
i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்;
iii. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்கும் தகைமை உள்ளது;
iv. விண்ணப்பதாரி ஏற்புடைய அனைத்து தகைமைகளை மற்றும் குறிப்பிட்ட வயதெல்லையை விண்ணப்ப கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அனைத்து வகையிலும் நிறைவு செய்திருந்தால் மாத்திரமே அவர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகைமைகளை கொண்டிருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவார்.

.

06. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை :**

(i) மேற்கூறிய (06) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு எழுத்து மூல பரீட்சை நடாத்தப்பட்டு, பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும். மேலே பந்தி ஒன்றில் காட்டப்படும் வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதோடு காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

(ii) விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் மின்னியல் தொலைதொடர்பு சாதனங்களை அணிந்திருக்காமையை உறுதி செய்யும் வகையில் இரு காதுகளையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்ளெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நொடியில் இருந்து முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை இனங்கண்டு கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாது இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவி தொடர்பில் தகைமைகளை நிறைவு செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருத்திற் கொள்ளக் கூடாது.

07. **தெரிவு செய்யும் முறைமை :**

எழுத்து பரீட்சையில் 50% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேலதிகமாக பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தி பெற்றவர்களாக கருதப்படுவர். பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குக்கமைய ஒழுங்குபடுத்தப்பட்டு வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கைக்கு அடிப்படை தகைமைகளை நிறைவு செய்துள்ள நபர்களிடையே பொதுவான நேர்முக பரீட்சையினை நடாத்தப்பட்டதன் பின்னர் தெரிவு செய்யப்படுவர்.

08. இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் புகையிரதப் பாதுகாவலர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பிலான விபரங்கள்:

(i) **பரீட்சை முறைமை மற்றும் பாட விதப்புரை**

இப் பரீட்சையானது கீழ்வரும் வினாத்தாள்களை கொண்டமைந்துள்ளது. பரீட்சையில் தேர்ச்சி பெற ஒவ்வொவ்வொரு வினாத்தாளுக்கும் 50% புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1. பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை
2. தொழில்நுட்ப அறிவு

(ii) பரீட்சை முறைமை

1. பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை - காலம் 01 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்
2. தொழில்நுட்ப அறிவு - காலம் 03 மணித்தியாலயங்கள் - 100 புள்ளிகள்

a. **பாட விதப்புரை**

**பாடம் இல. 01 பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை**

விண்ணப்பதாரியின் வாத திறமை மற்றும் விபரிப்பு ஆளுமை மற்றும் சரியான நிகழ்வினை அனுமானிப்பதற்கான திறமை, பொது அறிவு மற்றும் நுண்ணறிவு பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதினை நோக்காக கொண்டு இது அமைக்கப்பட்டுள்ளது. இது கணித பிரச்சினைகள், பொது அறிவு, சுற்றாடல் மற்றும் அதனை தழுவிய கேள்விகளை உள்ளடக்கிய பல்வினா மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் மாதிரியான வினாப் பத்திரமாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.

**பாடம் இல. 02 தொழில்நுட்ப அறிவு**

கபொ.த. (உயர் தர) மட்டத்திலான இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் போன்ற பாடங்கள் தொடர்பிலான அறிவு மற்றும் அடிப்படை தொழில்நுட்ப, பொதுவான இயந்திரோபகரண தொடர்பான அறிவினை பரீட்சிக்கின்ற பரீட்சையாகும். அனைத்து வினாக்களுக்கும் விடை யளிக்கப்பட வேண்டும்.

b. பரீட்சை முறைமை - பரீட்சை மொழி மூலம்

(அ) இப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலம் நடாத்தப்படும்.
(ஆ) விண்ணப்பதாரிகள் விரும்பிய ஓர் மொழியில் தோற்ற முடியும்.

குறிப்பு –

(1) விண்ணப்பதாரிகள் இப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் மாத்திரமே தோற்ற வேண்டும்.
(2) விண்ணப்பதாரியின் சுய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கான மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
(3) அனைத்து விண்ணப்பதாரிகளும் இரண்டு (02) வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.
(4) தடவையொன்றில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கையானது புகையிரத பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும்.

**09. விண்ணப்பங்களை முன்வைப்பதற்கான அறிவுரைகள்**

(I) பரீட்சைக்கான நிகழ்நிலை (online) விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் முன்வைக்கப்பட்ட விண்ணப்பமானது திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என அமைப்பிற்குள் பிரவேசிப்பதற்கு பயன் படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியொன்றின் மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தினை நிரப்புவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை(Instructions) தரவிறக்கம் செய்துக் கொள்ளவும். விண்ணப்பத்தினை நிரப்புகையில் அவ் அறிவுருத்தல்களை சரியாக கடைப்பிடிக்கவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிரகாரிக்கப்படும்.

(II) பரீட்சைக் கட்டணம் ரூ.1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் கொடுப்பனவானது கீழ்வரும் நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கட்டண முறைமைகளின் கீழ் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும்:

i. எந்தவொரு வங்கி கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit card);

ii. இணையத்தளத்தினூடாக செலுத்தும் வசதிகளையுடைய எந்தவொரு வங்கி பற்றட்டையின் மூலம் (Any Bank Debit card with the Facility of Internet Transaction) ;

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை (Online Banking Method of Bank of Ceylon);

iv. எந்தவொரு இலங்கை மக்கள் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon).

**குறிப்பு –**

(அ) மேற்கூறிய முறைகளின் கீழ் கட்டணத்தனைச் செலுத்தும் முறையினை பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு ஏற்புடைய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப் பெற்றமை குறித்து குறுஞ் செய்தியின் மூலம்(SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டியதுடன் பரீட்சை கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய செலுத்துதற் முறைகள் மூலம் பரீட்சை கட்டணங்களை செலுத்துகையில் ஏற்படும் முறைப்பாடுகள் தொடர்பில் இலங்கைப் புகையிரத திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(இ) பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கவோ அல்லது வேறு ஒரு பரீட்சை தொடர்பில் மாற்றப்படவோ மாட்டாது

(iii) தற்போது அரசாங்க/உள்ளூராட்சி சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் பிரதியொன்று தமது தனிநபர் கோவையில் இடப்படுவதன் பொருட்டு நிறுவன தலைவரிடம் பொறுப்பளிக்கப்பட வேண்டுமென்பதுடன் நேர்முக பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவன தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவையினை உறுத்திப்படுத்தும் கடிதமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பகோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சை கட்டணத்தினை செலுத்தி சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் நிகழ்நிலை மூலம் மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் இது குறித்து இணையத்தளத்தின் ஊடாக/விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தமது நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது குறித்து இலங்கைப் பரீட்சை திணைக்களத்தில் தாபன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையில் உசாவுதல் வேண்டும். அவ்வாறு உசாவுகையில் முழுப் பெயர்,தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி சரியாக குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வசிப்பவர் எனின் அவ் விடயங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியொன்றினை விரைவாக பெற்றுக்கொள்ளகூடிய வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும். அவ்வாறு உசாவுகையில் பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனுமொரு தகவலினை உறுதிபடுத்துவதற்கு நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றினை , பரீட்சை கட்டணத்தினை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியை தயாராக தம் வசம் வைத்திருப்பது பயன் தரும்.

10. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அச் சட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு கீழ்படிய அவருக்கு நேரிடும்.

11. **சேவை நிபந்தனைகள்**

ஆட்சேர்ப்பு செய்யப்படுவது இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் புகையிரத பாதுகாவலர் III ஆம் தரத்திற்கு என்பதோடு குறித்த சம்பள அளவுதிட்டத்தின் ஆரம்ப சம்பள மட்டத்தில் வைக்கப்படுவர். .

12. **பதவியில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள்** :

I. இப்பதவி நிரந்தரமானதாகும். அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஓய்வூதியம் தொடர்பிலான கொள்கைகளுக்கான தீர்மானத்திற்கு கீழ் பணிய வேண்டும். ஏற்கனவே விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவிற்கு பங்களிப்பு செய்பவர் எனின் தொடர்ந்தும் அதற்கு பங்களிப்பு நிதியினை செலுத்த வேண்டும்.

II. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 இன் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்க சேவைக்கு இணைந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஏனைய அரசமொழி தொடர்பில் தேர்ச்சியினை 05 வருடத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும். அத் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றமானது தகைமையினை பூர்த்தி செய்யும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

III. தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தாபனக்கோவையில் மற்றும் நிதி பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்ட கோவையின் ஏற்பாடுகளுக்கமையவும் கீழ் படிந்து சேவை செய்ய வேண்டும். அவ்வாறே காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், திணைக்கள அறிவுறுத்தல்களுக்கு கீழ் படிந்து சேவையாற்ற பொருந்தியுள்ளீர்.

IV. ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் திணைக்களத்தின் ஊடாக ஏற்புடைய துறைசார் பயிற்சி வழங்கப்படுவதுடன் அதன்பிறகு 10 வருட சேவை காலம் தொடர்பில் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட வேண்டும். உடன்படிக்கையை மீறும் பட்சத்தில் ரூ.1,000,000.00 பணத்தொகையினை திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு விண்ணப்பதாரி பொருந்தியிருத்தல் வேண்டும்.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பிலான இறுதி தீர்மானத்தினை மேற்கொள்ளும் அதிகாரம் புகையிரத பொது முகாமையாளருக்கு உள்ளது. புகையிரதப் பாதுகாவலர் ஆட்சேர்ப்பு திட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளும் இவ் அறிவித்தலுக்கு ஏற்புடையதாகும்.

14. இவ் அறிவித்தலானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுவதோடு யாதேனுமொரு பொருத்தப்பாடற்ற அல்லது இணங்காத தன்மை காணப்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஜே. ஐ. டீ. ஜயசுந்தர,
புகையிரதப் பொது முகாமையாளர்.

இலங்கை புகையிரத திணைக்களம்,
இல. 355, ஒல்கோர்ட் மாவத்தை,
கொழும்பு 10,
2025, பெப்புருவரி 11.

02-124